உ
சிவமயம்

REGISTERED ASA NEWS PAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புக் ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு தை மீ ௩ உ (1948 ஜனவரி 16 வெள்ளிக்கிழமை) [இல ௭௮

## திருக்கேதீச்சரத்தைப் பற்றிய அறிக்கை*

யாழ்ப்பாணம் சைவப்பரிபாலன சபையின் 14-12-47ல் நடைபெற்ற திருவாகசபைக் கூட்டத்தில் மேற்படி சபையார் திரு. கா. சண்முகம் அவர்களையும் சபைக் காரியதரிசி திரு. மு. மயில்வாகனம் அவர்களையும் திருக்கேதீச்சரத்திற்குச்சென்று அச் சிவாலயத்தின் நிலைமையைப் பார்வையிட்டு விசாரணை செய்து அதன் நிலைமையையும் அதனைச் சிறப்பாக நடத்தக்கூடிய வழிவகைகளையும் யோசித்து ஒரு அறிக்கையெழுதிச் சமர்ப்பிக்கும்படி நியமனஞ் செய்தார்கள். அவர்கள் இருவரும் அப்புராதன தலத்தை நேரிற் சென்று தரிசித்தபின் ஆராய்ந்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:—

"திருக்கேதீச்சரம் என்னும் சிவாலயம் மிகப் பழமையானது. தக்ஷிண கைலாச மான்மியத்தில் அதன மகிமை கூறப்படுகிறது; சமயகுரவர்களுள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும் சுந்தரமூர்த்திநாயனாராலும் பாடப்பெற்ற தலமாகும். சுவாமி பெயர் கேதீச்சுரர். தேவி பெயர் கௌரிநாயகியம்பாள்; இந்த ஈழநாட்டிலே தேவாரம் பெற்ற தலங்களிரண்டனுள் இதுவொன்றாகும்; மற்றது திருக்கோணமலையாகும். கோணேசுவரனகோயில கடல்வாய்ப்பட்டதென்பர் இத்தலம் நிலமுற்றமைக்குக் காரணம் புலப்படவில்லை.

இதனைப் புதுப்பித்துப் பழையபடி நித்திய நைமித்திகங்கள் நடைபெறச் செய்யவேண்டுமெனவிரும்பி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் 1872-ம் ஆண்டில் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டார்கள். "லவகையில் மாதோட்டத்துக்குச்சமீபமாக ஒரு மருந்திருக்கின்றது ஒரு தென்பொந்திருக்கின்றது, ஒரு தரவியம் இருக்கின்றது." என நாவலரவர்கள் தமது விஞ்ஞாபனத்தில் மேற்படி சிவாலயத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நாவலரவர்களுடைய விஞ்ஞாபனம் வெளிவந்து 21 வருடங்களுக்குப் பின், 1893ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், திருக்கேதீச்சரம் என்னும் சிவாலயம் இருந்த நிலத்தை, யாழ்ப்பாணக் கச்சேரியில் பிரசித்த ஏலத்தில் விற்பதாக அரசினர் விளம்பரஞ் செய்தார்கள். அந்த கோத்திர கத்தோலிக்ககுருமார்சிலர் ஷை நிலத்தை விலைக்கு வாங்க வந்திருந்தார்களெனவும், இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து சைவமக்கள பெருந்தொகையினர் யாழ்ப்பாணக் கச்சேரியில் வந்து கூடினார்களெனவும், கத்தோலிக்கர் ரூ 3050 வரை விலைகேட்க சைவ மக்கள் என்ன விலை வந்தாலும் குறித்த நிலத்தை விலைக்குப்பெற ஆயத்தமாக விருந்தார்களெனவும், சைவமக்கள் சார்பாக ஸ்ரீமான ராம. அரு. அரு. பழனியப்பச் செட்டியார் ரூபா 3100 மேலதிக விலை கேட்டுக்குறித்த நிலத்தைச் சைவர்களுடைய சம்மதத்துடன தமதுபேருக்குப் பெற்றுக் கொண்டனரெனவும் யாழ்ப்பாணம் சைவமக்கள் குறித்த நிலத்தின் கிரயத்தின் ஒரு பெரும் பகுதியை உதவினரெனவும் அறியக்கிடக்கின்றன.

1894-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஆகஸ்டுமாதம் வரையும் வண்ணார்பண்ணை ஸ்ரீமான் மு பசுபதிச் செட்டியாரவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கற்சிற்பர்களையும் கூலியாட்களையும் கொண்டுபோய் காடு வெட்டி ஷை நிலத்தைப் பரிசோதனை செய்து கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம முதலான மண்டபங்கள், துவசத்தமபம்பலிபீடம் ஆதியவற்றின் அத்திவாரத்தைக்கண்டுபிடித்தனர்; மதுரைத் திருநகரங்கண்ட பாண்டியராசன்போல, இத்தலத்தைச் செட்டியார் புதுக்குவித்துச் சைவாகம விதிப்படி ஆதிச்சைவப்பிராமணர்களை நியமித்துப் பூசை முதலியன செய்வித்து, குறித்த இடத்தை நகரமாக்குவார்களெனவும், அங்குச் சைவமக்கள் குடியேறுவார்களெனவும், சைவப்பள்ளிக்கூடங்கள் பிரசங்கமண்டபங்கள் அத்தியயனசாலைகள் தாபிப்பார்களெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கைச் சைவ மக்களுடைய உதவியினாலும் செட்டிமார்களுடைய உதவியினாலும மேற்படி கோவிலின் திருப்பணி ஆரம்பிக்கப்பெற்று, சுவாமி கோவில் அம்பாள்கோவில் மடைப்பள்ளி முதலியன கட்டிக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலே, கோவிற்றிருப்பணிக்கு ரூபா 22000 வரையில் சேர்ந்ததாக அறியக்கிடக்கின்றது. இக்கோவில் இப்பொழுது கொழும்புப் புதுக்கதிரேசன கோவில் மனேசராகவுள்ள செட்டியாருடைய நிருவாகத்திலிருக்கின்றது. கோவிலுக்குச் சொந்தமாக 78 ஏக்கர் விளைநிலமுண்டு. கோவிலைச் சுற்றி 30 ஏக்கர் நிலம் இருக்கின்றது. யாழ்ப்பாணம், கொழும்பு, நீர்கொழும்பு முதலிய பகுதிகளிலிருந்து கோவிற் பூசை முதலியசெலவுகளுக்கும்வேலையாட்களின் வேதனத்துக்குமாக மாதந்தோறும் நகரத்தார் பணம் உபகரித்து வந்தனர். இப்பொழுது அவ்வருவாய் மிகவும் குறைந்துவிட்டது.

இப்பொழுது கோவிற் கருமங்களைப் பார்ப்பதற்கு ஒரு பூசகரும், ஒரு கணக்கப்பிள்ளையும், மாலைகட்டுபவரொருவரும் இரண்டு கூலியாட்களும் இருக்கின்றார்கள். திருவிழாக்கள நடைபெறுவதில்லை. ஆனிமாதத்தில்ஒருசங்காபிஷேகமும் அன்னதானமும்அலங்காரத்திருவிழாவுநடைபெறுகின்றன. குறித்த அலங்காரத் திருவிழாவில் நிகழு தாசிகள்நடனத்தை உபயகாரர் தவிர்ப்பது நலமாகும். திருவெம்பாவைக் காலத்தில் திருவெம்பாவை ஓதப்படுவதில்லை. சுவாமிகோவிற் பண்டிகை இடையிடையே சிதைந்திருக்கின்றது. புல் பூடு சிறுமரங்கள் அதில் முளைத்துள்ளன; அம்பாள்கோவிற் பண்டிகையும் [illegible] கோவிற் பண்டிகையும் பழுதுபட்டுள்ளன.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

பூளைபுனை கொன்றையொடு புரிசடையி னானைப்
புனலாகி அனலாகிப் பூதங்கள் ஐந்தாய்
நாளையின்று நெருநலாய் ஆகாயமாகி
ஞாயிறாய் மதியமாய் நின்றஎம் பரனைப்
பாளைபடு பைங்கமுகின் சூழலிளந் தெங்கின்
படுமதஞ்சேம் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயி லாலும்வளர் சோலைக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.

— சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

## சமரசம் ஏற்பட்டது

### கண்டிச் சிங்களரும் சுதந்திரமும்

இனி வரவிருக்கும் சுதந்திரத்தில் பௌத்தமதத்துக்குப் போதிய பாதுகாப்பில்லாதபடியால், சுதந்திரதினக் கொண்டாட்டத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாகக் கண்டித் தாலதா மாளிகைப் பௌத்த குரவரும், கண்டிப் பிரதானிகளும் முதல் தீர்மானித்தனர். ஆனால் மிஸ்ரர் சேனநாயக்கா, அவர்களைச் சென்றவாரம் கண்டியிற் சந்தித்து நிலைமையை விளக்கினாராம. 1946ம் ஆண்டின் இலங்கை அரசியற் சீர்திருத்தம் சம்பந்தமான 29ம் பிரமாணம 2-ம் உபவிதியில் பௌத்தமதத்துக்குமாத்திரம் அன்றிஎல்லா மதங்களுக்கும் அரசாங்கப் பாதுகாப்பளிக்கும என்று கண்டிப்பாகக் காட்டப்பட்டிருக்கிறபடியால், இப்போது பிரத்தியேகமான பிரமாணம் வேண்டியதில்லைஎன்று மிஸ்ரர் சேனநாயக்கா தெரிவித்தாராம்.

சமதர்மிகள, சமசமாஜிகள் முதலாம் இடதுசாரிகளில், சில பௌத்த பிக்குகளும சேர்ந்திருக்கின்றனர். இவர்களை எல்லாம் திருத்துவது, பௌத்தமத குரவரின் கடமை என்றும் மிஸ்ரர் சேனநாயக்கா தெரிவித்தாராம.

## அரிசி விநியோக அளவு

### சுதந்திர வாரத்தில் இரட்டிப்பு

வருகிற பிப்ரவரி மாதம் 4ம் திகதி இலங்கை சுயராச்சியம் அடையப்போவதையிட்டு, அம்மாதத்தின் முதல்வாரத்தில் இப்போதுள்ள உணவு விநியோக அளவை இரண்டு மடங்காக்க அரசாங்கம் நிச்சயித்துள்ளது. அதாவது சாதாரண ஆளுக்கு 2 படி விகிதமும், தொழிலாளர்க்கு $2\frac{1}{2}$ படி விகிதமும், குழந்தைகளுக்கு ஒரு படி விகிதமும் குறித்த வாரத்தில் விநியோகிக்கப்படும்.

அதன்பின் இப்போதுள்ள உணவு விநியோக அளவில் காற்படி மாத்திரமே அதிகரிக்கப்படும். அதாவது வாரம் ஒன்றுக்கு 1 படி விகிதம் பெறும சாதாரண ஆளுக்கு $1\frac{1}{4}$ படி விநியோகிக்கப்படும்.

இப்போது கொடுக்கப்படும் ஒரு றாத்தல் மா, அரிசி அளவு கூட்டப்படுமாதலால் அரை றாத்தலாகக் குறைக்கப்படுமாம்.

---

சம்பாஷணை முடிவில், பௌத்த குருமார், மிஸ்ரர் சேனநாயக்காவின் கோரிக்கைக் கிணங்கி, சுதந்திரதினக் கொண்டாட்டத்திற் பங்குபற்றச் சம்மதித்தனராம்.

## அமெரிக்கஉறவு வேண்டாம்

### பிரிட்டிஷார்க்குப் பேராசிரியர் எச்சரிக்கை

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் பிரபல அங்கத்தவரும பேராசிரியருமான ஹரால்ட் லாஸ்கி பிரிட்டனின் எதிர்காலம் எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில் அவர் கூறுவதாவது:

"அமெரிக்காவுடன் அதிக உறவு ஆகாது. அமெரிக்காவுடன் சேர்ந்து, மற்றும் நாடுகளுக்கெதிராக இருந்தால், ஈற்றில் இங்கிலாந்தின் சுதந்திரத்துக்கே ஆபத்தாக முடியும்.

"இப்போது ருஷியாமீதும், கிழக்கு ஐரோப்பாமீதும் எமது மனப்பான்மை நல்லாயில்லை. இந்த வெறுப்பு மனப்பான்மை நீங்கவேண்டும். ருஷியா எம்மீது கொண்டுள்ள சந்தேகமனப்பான்மையை நீக்கி, அதன் பாதுகாப்புக்கு விரோதமான எந்த விஷயத்திலும நாம் ஈடுபடமாட்டோம என்பதனை விளக்கி, நாம் அந்நாட்டுடன ஓர் உடன்படிக்கை செய்தல் வேண்டும். அப்படியான ஓர் உடன்படிக்கையை நாம் இப்போது செய்துவிட்டால், தொழிற்கட்சி போய், சேர்ச்சிலின் கன்ஸர்வேற்றிவ் கட்சிதான் அதிகாரத்துக்கு வந்தாலும் அந்த உடனபடிக்கையை நிராகரிக்க முடியாது.

"ருஷியாவும, தனக்குக்கீழ் அடங்கிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பிரிட்டன்பாற்கொண்டுள்ள விரோத மனப்பான்மையைநீக்கவேண்டுமென்று கட்டளையிடவேண்டும், பிரிட்டன், கிழக்கு ஐரோப்பாவில் நடந்திருக்கும் சமூகப்புரட்சியை ஒப்புக்கொண்டு அதற்குத்தக்கதாகத் தன்னை அமைத்துக்கொள்ளுதல வேண்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸ்ரீ
தைமீ ௩ உ வெள்ளிக்கிழமை

## திருக்கேதீச்சரத் தல நிலை

திருச்சிற்றம்பலம்.

"நத்தார் படை ஞானன்பசு
வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மத யானையுரி
போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு
பாலாவியின் கரைமேற்
செத்தா ரெலும் பணிவான்திருக்
கேதீச்சரத் தானே"

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

இந்த இலங்கையிலுள்ள திருக்கேதீச்சரம் என்னுந் தலம் தேவாரம்பெற்ற புராதன புண்ணியதலமென்பதும், நவக்கிரகங்களுட் கேதுவினல் ஆதியிற் பூசிக்கப்பெற்றமையின் இப்பெயர்த்தாயிற்றென்பதும் இன்னபிற மதத்துவங்களும், இத்தலம் இடையிற் சிலமூற்றுக்கிடந்ததென்பதும், பின்னர் இங்குள்ள சைவ மக்களின் முயற்சியினுலும், இங்கு வாணிகம் நடத்தும் நோக்கமாக வந்திருந்த நகரத்தாரென வழங்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிள்ளைகளின் முயற்சியினுலும் இத்தலம் ஒருவாறு புநருத்தாரணஞ் செய்யப்பெற்று நித்தியநைமித்திகங்களும் ஒரு அளவிற்கு முட்டின்றி நடைபெற்றுவந்ததும் சைவமக்கள் பலர் அறிந்த விஷயம்; ஆனுலும் இப்புராதனலயம், இலங்கையிலே செட்டிப் பிள்ளைகளின் ஆதிக்கம் குன்றியகாரணத்தினுற்போலும் சென்ற சில ஆண்டுகளாக நித்திய நைமித்திகங் குறைந்துவரப் பெறுவதாயிற்று.

இதனைக் கேள்வியுற்ற யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார், தங்கள் சபையிலுள்ள அங்கத்தவர்களிருவரை அத்தலத்திற்குப் போக்கி, அவர்கள் வாயிலாக அத்தலத்தின் இக்கால நிலைமையை ஒருவாறு ஆராய்வித்து அறியலாயினர்; அங்குச்சென்ற மேற்படிசபைப் பிரதிநிதிகளிருவரும் திருக்கேதீச்சரத்தலம் இப்பொழுது அடைந்திருக்கும் சிலமான நிலைமையையும், அதனைத் திருத்தி முந்திய நல்ல நிலையில் நடைபெறச் செய்தற்காகிய வழிவகைகளையும் ஒருவாறு தங்கள் அறிக்கைப்பத்திரத்தில் எடுத்துக்காட்டியுள்ளார்கள்; அவ்வறிக்கை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையைச் சைவநன்மக்கள் ஒவ்வொருவரும் ஒருமுறை இருமுறை மும்முறை படித்து ஊன்றிச் சிந்தித்தல்வேண்டும். சிந்தித்தால் அத்திருப்பணி விஷயமாகத் தம்மால் இயன்ற முயற்சி செய்யவேண்டுமென உள்ளங் கிளருமே யொழிய, உண்மையான சைவனெவனும் சும்மா விருத்தல் முடியாது.

இந்த இலங்கையிலே தேவாரம்பெற்ற தலங்கள் இரண்டு மாத்திரம் விளங்கின. அவற்றுளொன்ருகிய திருக்கோணமலைத்தலத்தைக் கடல்கொண்டு விட்டதென்பர்; இப்பொழுது அங்கு வைத்துப் பூசிக்குந் தலம் (இடம்) பழைய தலத்தின் ஞாபகார்த்தமாகவுள்ளது; தேவாரம்பெற்ற மற்றத் தலந்தான் இந்தத் திருக்கேதீச்சரம், இதனையும் பழையபடி சிலமூற விடுத்து, நாங்களும் சைவசமயத்தவர்களென்று சொல்வது பொருந்தாக்கூற்ருகும். எச்சமயத்தினர் விஷயத்திலும், அவ்வச்சமயத்தவர்கள்போய் வழிபடுதற்காகிய தலங்களை அமைத்தல் புதுக்குவித்தல் என்னுங் கருமங்களில் அவ்வச்சமயவாதிகளே ஈடுபட்டுப் பத்தியொடு உழைத்தல்வேண்டும். அரசினர் ஒருபோதும் இப்படியான சற்கருமங்களுக்குத் துணைசெய்யமாட்டார்கள்; இப்பொழுதுள்ள அரசினர், முந்தி இலங்கையை அடக்கியாண்ட பறங்கியர் ஒல்லாந்தர் செய்தவாறு இங்குள்ள பழைய தலங்களை யிடித்தொழித்தலைச் செய்யமாட்டார்கள்; உள்ள தலங்களையும் புதியனவாய் ஆக்கப்படுந் தலங்களையும் அவைகளுக்கு எவ்வகையான இடையூறும் நேராவண்ணம் பாதுகாத்தளிப்பர்.

இந்த இலங்கையிலே யுள்ள ஏனைய சமயவாதிகளெல்லாரும் தங்கள் பழைய கோவில்களைப் புதுப்பித்தலையும், ஆங்காங்குப் பலவகைத் திருத்தங்கள் செய்தலையும், புதியகோயில்கள் ஆக்குதலையும் நேரிற்காணலாகும்; ஆனல் இந்நாட்டிலுள்ள சைவாலயங்கள் காலந்தோறும் நித்திய நைமித்திகங்கள் குன்றுதலையும், பிரதானமான சிவதலம் சிலமடைதலையும்,, கோயிலுரிமையின்பொருட்டு வியாச்சியங்கள நடத்தலையும் காண்கின்ருேமே யொழிய, சிலவினுஞ் சில ஆலயங்கள்தவிர ஏனையவெல்லாம் நிலைகெட்டிருத்தலையே காண்கின்ருேம்; இந்த நிலைமையிலே இன்னமுங்கிடப்போமாஞல், இங்குள்ள சைவமக்கள் காலகதியில் இல்லாதொழிவரென்பது நிசம். இந்தியாவிலே பல மாறுதல்களும் அநர்த்தங்களுங்காலந்தோறும் நேர்ந்தனவெனினும், சைவம் வைஷ்ணவமென்னும் சமயங்கள் குன்ருமலிருத்தற்குப் பிரதானகாரணம் அங்குள்ள தொன்மையான புண்ணியதலங்கள் இன்றும் நன்ருய் நடைபெற்றுவருதலேயாகும்.

இங்ஙனமெல்லா மிருத்தலினலே, இந்நாட்டிலுள்ள சைவ சமயச்சார்பான சபைகள் சங்கங்களென்னுமிவைகளும், சைவமக்களாகிய ஆண்களும் பெண்களும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து இத்தலத்திற் செய்யவேண்டிய இன்றியமையாத் திருப்பணிகளைச் செய்து சம்புரோக்ஷண கும்பாபிடேகத்தையும் நிறைவேற்றி இப்புராதன தலத்திலே நித்திய நைமித்திகங்கள் இனிது நடைபெறச்செய்தல்வேண்டும்; இவைகளையெல்லாம் நிர்வகித்துச்செய்தற்காகிய ஒரு சிறந்த நிர்வாக சபையை இன்னே நிறுவுதல் வேண்டும்; கௌரிநாயகியம்பாள்சமேத திருக்கேதீசுவரநாதனுந் திருவருள்புரிதல்வேண்டும்.

"மாடெலாமண முரசெனக் கடலின
தொலிகவர் மாதோட்டத்
தாடலேறுடை யண்ணல் கேதீச்சரத்
தடிகளை யணிகாழி
நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன்சொல்
நவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பத்தர்காள்!
பரகதி பெறலாமே"

திருச்சிற்றம்பலம்

# உலகம் பலவிதக் கதை

(முற்ருெடர்—47)

### இரத்தினவல்லி

"கலாவதி யென்னும் உருத்திர கணிகை யொருத்தி ஒரு சிவராத்திரி புண்ணியகாலத்திலே, காசியிலுள்ள இரத்தினேசுவர சிவலிங்கத்தின் சந்நிதியிற் பத்தியோடு நர்த்தனஞ்செய்து பாடியதன் பயனுக, அடுத்தபிறப்பிற் காந்தருவராச னெருவனுக்குச் சிறந்த மகளாய்ப் பிறந்தாள்: பெற்ருேரும் பெரியோரும் அவளுக்கு இரத்தினவல்லி யெனப் பெயரிட்டனர்: இரத்தினவல்லி பேரழகிலும் இசையிலும் யாழ் வாசித்தலிலும் தனக்கு ஒப்பாரும மிக்காரு மில்லாதவளாய் வளர்ந்து கன்னிப்பருவமடைந்தாள்; தந்தையாகிய காந்தருவ வேந்தன் தன் புதல்விக்கு, சந்திரலேகை அனந்தலேகை சித்திரலேகை யென்னும் மூன்று கன்னியரைச் சேடியராக நியமிக்க, அம்மூவருடன் இரத்தினவல்லி யாழ் வாசித்து இசை பாடிக் கலைமகளை நாள்தோறும் வணங்கிக்கொண்டு புனலாடல் பூக்கொய்தல் பந்தாடல் நாட்டியம் பயிலுதல் முதலிய பொதுபோக்குக்குரிய கருமங்களைச் செய்து வருவாளாயினள்; அந்த இரத்தினவல்லிக்கு இறைவனருளால் முற்பிறப்பைப் பற்றிய ஞானங் கைகூட, அதனை யுணர்ந்து அக்கன்னிகை தன்னுடைய பாங்கியர் மூவரோடும் தினந்தோறும் காசியையடைந்து கங்கையில் மூழ்கிக் கடன்முடித்து இரத்தினேசுவர லிங்கப்பெருமானை வணங்கி யன்றி ஆகாரம் உட்கொள்வதில்லை யென்ற நியதி பூண்டவளாயினள்; இங்ஙனமாக, ஒருநாள் இரத்தினேசுவரலிங்கப்பெருமானுடைய சந்நிதியில் இரத்தினவல்லி தன் தோழியர்மூவரோடும நின்று யாழ்வாசித்துத் தோத்திரஞ்செய்துகொண்டு மீண்டு தன் மாளிகையை யடைந்து, அன்றிரவு உறங்கிக் கிடக்கும்போது, இரத்தினேசுவரமூர்த்தி அவளுடைய சொப்பனத்திற்ருேன்றியருளி "கன்னிகையே, எமது உள்ளமுருக எம முன்னிலையில் இன்று பகல் நீ நின்று இசைபாடியதன் பயனுக, நின் பெயரோடொத்த பெயருள்ள அரசகுமாரனெருவன் நின்னைச் சொப்பனவதசையில் வந்து கலந்து பின்னர் நினக்கு நாயகனுவான் எனக்கூறி மறைந்தருளினர்; விடிந்தபின் இறைவன் தனக்கருளிய வரத்தை இரத்தினவல்லி தன் பாங்கியருக்கு நாணமீதூர மெல்லமெல்லச் சொல்ல, அவர்கள் கேட்டு மகிழ்ந்து "இவையெல்லாம் நீ செய்த தவத்தின் விளைவு" என்றுகூறி மகிழ்ந்தார்கள்;

### கனவு நனவானமை

இரத்தினவல்லி இறைவன் தனக்குச் சொப்பனத்திலே தோன்றி உதவியருளிய வரத்தை நினைந்தவளாய்க் காதல்மீதூரப் பஞ்சணையிற் படுத்துறங்கும்போது, இரத்தினசூடனெனப்படும் உத்தம இலக்கணம் வாய்ந்த நாகநுலக அரசகுமாரன் சொப்பனவத்தையிலேயே தன்னை வந்து கலந்ததாகவுணர்ந்து கண்விழித்தா நனவிற் கூடப்பெற்ருள்போல் மதித்துப் பிரிவாற்ருது கலங்கி வேதனையுற்றுச் சோர்ந்தாள்; படுத்த படுக்கைவிட் டெழுதலின்றி வாடிய பூங் கொடியெனக் கிடந்தாள்; சேடியர் மூவரும் அதிகாலையில் அவள் சோகமுற்றுக் கிடத்தலைக் கண்டு உளம் பதைபதைத்து அவள் பக்கலிலிருந்து சோகத்திற்குக காரமென்னவென ஆவலுடன் வினவினர்; இரத்தினவல்லி காரணங்கூற நாணியவளாய்ச் சொல்லுத லின்றித் தன் தோழியருடன் காசித்தலத்தை யடைந்தாள்; கங்கையில்மூழ்கி நித்திய கடன்களை முடித்தாள், இரத்தினேசுவரமூர்த்தி சந்நிதியை யடைந்து யாழ்வாசித்து இசைபாடித் துதித்துப் பஞ்சாங்கமாக விழ்ந்து வணங்கினுள்; பின்னர் தன் சேடியர் புடைசூழ அயலி லுள்ள பூஞ்சோலையையடைந்தாள்; அப் பூஞ்சோலையின்கணுள்ள ஒரு மரநிழலிலே மலர்களால மூடுண்டு கிடக்கும் வெண் மணலின்மீது, இரத்தினவல்லி தன் சேடியர்சூழ இருந்தாள்; முந்திய இரவு கண்ட கனவினைச் சிந்தித்துச் சிந்தித்து உள்ளமுருகினுள்; அந்த நேரத்திற் சிறு தென்றலும் மெல்ல வீசியது; தன் சேடியருளொருத்தியின் மடிமிசை தலை வைத்தபடி அயர்ச்சி யடைந்தாள் இரத்தினவல்லி; அதுகண்ட பாங்கியர் பதைத்துச் சிறங்கையிற் கங்கைநீர் அள்ளிக்கொண்டு ராச குமாரியின் முகத்திலே தெளித்துச் சைத்தியோபசாரஞ்செய்ய, உறங்கி யெழுவாள் போற கண்விழித்து மெல்ல எழுந்திருந்தாள்; கலக்கங்கொண்ட பாங்கியர் மூவரும் ஒருவாறுதேறி அரசகுமாரிகொண்ட கலக்கத்தின் காரணத்தைத் தங்களுக்கு ஒளியாமல் வெளியிடும்படி பரிவுடன் கேட்டார்கள்; இரத்தினவல்லி இறைவனுடைய வாக்கின்படி இரத்தினசூடன் தன்னைக் கனவில்வந்து கலந்த இரகசியத்தை உளங்கூச வாய்கூச ஒருவாறு வெளியிட்டு, உள்ளத்தில் வைராக்கியம் பூண்டவளாய்த் தன் பாங்கியர் மூவரையும் நோக்கி:

"உள்ளங் கவர்ந்தென் உளத்தூடு
புக்கொளித்த
கள்ளன்றனை யெனக்குக் காட்டா
தொழிவீரேல்
தள்ளுங கயல்போல் துணைவிழியீர்
இவ்வுலகம்
எள்ளும் படியான் இறந்து
பாடெய்துவனுல்".

என் ஆருயிர்ப் பாங்கிமீர்! சொப்பனத்தில் வந்து என்னுடைய அரிய உயிரைக் கொள்ளை கொண்டுபோன அந்தப் புருஷோத்தமனை நீங்கள் எவ்விதத்திலேனும் எனக்குக் காட்டி வைக்க வேண்டும்; செய்யத் தவறுவீரேல், உயிர் மாய்ப்பேன்; இது சத்தியம்" என்று சொல்லி மீளவும் அறிவு சோர்ந்தாள்,

### தோழியர் செய்த சூழ்ச்சி

தங்கள் அரசகுமாரியின் தீர்க்கமான சபதத்தைக் கேட்ட மூவரும் சற்றுநேரங் கலங்கினர்கள்; கனவிற்ருேன்றியவனை நனவிற் கொண்டு வந்து காட்டுவ தெவ்வாறு என்று

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்மா அரிசி

## இனி 'மில்ச்சாட்' கிடைக்கலாம்

பர்மாச் சுதந்திரவிழாவிற் பங்குபற்றச் சென்ற இலங்கை உதவிப் பிரதமர் மிஸ்ரர் எஸ். டபிள்யூ. ஆர் டீ. பண்டாரநாயக்கா சென்ற வெள்ளிக்கிழமை மீண்டுவிட்டார். இரண்டு தேசங்களுக்குமிடையே பூரணமான நல்லெண்ணமும் பரந்த நேசபான்மையும் நிலவுகின்றன என்றும், அவற்றைப் பலப்படுத்த, இரண்டு நாடுகளும் ராஜரீகத் தூதுவரை மாற்றிக்கொள்ளவேண்டும் என்றும் மிஸ்ரர் பண்டாரநாயக்கா தமது பர்மா விஜயம்பற்றி ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர். மேலும் அவர் கூறியதாவது;


'நான் றங்கூனில் நின்றபோது, இலங்கைக்குப் பர்மா உணவுப்பொருள்கள் அனுப்புவதுபற்றி, பல பர்மிய மந்திரிகளுடன்சம்பாஷித்தேன். இப்போது அனுப்பும் அரிசிக்குப் பதிலாக, பழையபடி "மில்ச்சாட் அரிசியையே அனுப்பவேண்டுமென்றும் கேட்டேன். அதுவுமன்றி, அனுப்பும அரிசியைச் சுணக்காமல் அனுப்பும்படியும் கோரினேன்.

"இனி, மில்ச்சாட் அரிசியையே அனுப்பத் தாம் முயற்சி செய்வதாகவும், காலதாமதமின்றி அரிசியை அனுப்ப ஏற்பாடுகள் செய்வதாகவும் பர்மிய மந்திரிகள் எனக்கு வாக்களித்தனர்.

"அரிசி மாத்திரமின்றி, பருப்பு வகைகளும் போதிய அளவுக்கு அனுப்பவேண்டுமென்று நான்கோரினேன். அவர்கள் அதற்கும் இணங்கினர்.

# மகாத்மா உபவாசம்

## வகுப்புக் கலகங்களால் வேதனை



மகாத்மாகாந்தி சென்ற செவ்வாய்க்கிழமை பகல் 11 மணி தொடக்கமாக உண்ணாவிரதம் அநுட்டித்து வருகிறர். பொதுவாக இந்தியா வெங்கணும் விசேஷமாகப் புதுடெல்கியில் வகுப்புக் கலகங்கள் குறையாமல் வளர்ந்துகொண்டு வருவதும், ஹிந்து முஸ்லீம்-சீக்கியர்க்கிடையே ஒற்றுமையில்லாதிருப்பதுமே மகாத்மாவின் உபவாசத்துக்குக் காரணம். சமூகங்கள் யாவும் தமக்குள்ளே ஐக்கியப்பட்டு இனி இப்படியான கலவரங்கள் நிகழா என்று உத்தரவாதம் அளிக்கும்வரை, தாம் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதில்லை என்று அடிகள் ஓர் அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறா.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் காந்திஜி, தம் பொதுவாழ்வில் 15 முறை உண்ணாவிரதம் அனுஷ்டித்திருக்கிறர் இது 16-வது உண்ணாவிரதம்.

சென்ற செப்டம்பர்மாதம் கல்கத்தா நகரில் பெரும் வகுப்புக்கலவரம் மூண்ட போது அதைக் காணச்சகியாது கல்கத்தா மக்களுக்குப் புத்தி சுவாதீனம் ஏற்பட காந்திஜி உண்ணாவிரதம் மேற்கொண்டார். உண்ணாவிரதம் மூன்று தினங்கள் நீடித்தது நகரில் அமைதி ஏற்பட்டதும். நகரமக்களுக்குப் புத்திசுவாதீனம் ஏற்பட்டதென திருப்தியுற்றதும் அவர் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்.

காந்திஜியின் தற்போதைய உண்ணாவிரத அறிவிப்பானது, அவரது சகாக்களுக்கும், அரசாங்க தலைவர்களுக்கும் பெரும் பரபரப்பை அளிப்பதாய் வெளிவந்துள்ளது பூரணதேகாரோக்கியத்துடன் காந்திஜி இருந்து வருகிறர் எனக்கூற முடியாது. அவரது அண்மையிலுள்ளவர்கள், உண்ணாவிரதமிருக்கும் முடிவைக் கேட்டு பெரிதும் பரபரப்படையாமலில்லை.

திங்கட்கிழமை மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் தமது உண்ணாவிரத முடிவை அறிக்கையில் காந்திஜி கீழ்கண்டவாறு தெரிவித்தார்:-

ஆசியமக்களின் இதயத்தில் இந்தியா கொண்டிருந்த ஆதிக்கம் வேகமாய் மங்கிவருகிறது; தேசத்தின் கண்ணியம் குன்றி வருகிறது அவற்றை நான் மீண்டும் பிரகாசிக்கச் செய்வதே எனது நோக்கம்.

இதய சுத்தம் படைத்த எம்மனிதனுக்கும் அவன் அர்ப்பணம் செய்வதற்கு உயிரைத் தவிரச் சிறந்த பொருளில்லை.

"நான் கைக்கொள்ளும் சாதனையை ஆசீர்வதிக்கவும், எனக்காக என்னுடன் பிரார்த்தனை செய்யவும் நாட்டுமக்களனைவரையும் வேண்டுகிறேன்.

உண்ணாவிரதம் நாளைமுதல் ஆகாரம் புசித்ததும் தொடங்குகிறது இவ்வுண்ணாவிரதம் காலவரையின்றி நீடிக்கும் உப்புக்கலந்த அல்லது கலவாத நீரையும் எலுமிச்சம்பழ ரசத்தையும் நான் பருகலாம்.

வெளி நிர்ப்பந்தமின்றி கடமை உணர்ச்சிமேலீட்டால், நாட்டில் வாழுகின்ற சகல வகுப்பினரிடையேயும் மனஒற்றுமை ஏற்படும்வரை ஏற்பட்டுவிட்டது என நான் திருப்தியுறும்வரை உண்ணாவிரதத்தை நீடிப்பேன் என்றார் காந்திஜி

காந்திஜி மேலும் கூறியதாவது:

"நான் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் உயரிய நோக்கத்தை அனைவரும் உணரவேண்டும். நான் சாகத்தான் வேண்டுமெனினும் நிம்மதியுடன் சாகவேண்டும்.

இந்தியாவும் ஹிந்துமதமும் சீக்கியமதமும் இஸ்லாமியமும் அழிந்து நாசமாவதைக் கண்ணாரக் கண்டும், தடுத்துக் காக்க முடியாத நிலையிலிருப்பதைப் பார்க்கிலும் சாவதே எனக்குப் பெரும் மோட்சமாக விருக்கும். பல்வேறு சமூகத்தவர்க்ளுக்கும் மதத்தலைவர்களுக்கும் சமத்துவ அந்தஸ்து, பாதுகாப்பு இவற்றை பாகிஸ்தான் அளியாதுபோனல்-பாகிஸ்தானின் போக்கை இந்தியாவும் பின்பற்றினல் அழிவு நிச்சயம் சம்பவிக்கும்" என்று எச்சரித்தார் காந்திஜீ.

# முதல் கவர்னர் ஜெனரல்

## இலங்கை அரசியலில் நடக்கப்போகும் மாற்றம்

வருகிற பிப்ரவரி 4-ம் திகதியுடன் இப்போது தேசாதிபதியாகவுள்ள சேர். ஹென்றிமேஸன்மூர் கவர்னர் ஜெனரல் என வழங்கப்படுவார். இவர் தம் பதவிக்காலம் முடிந்து விலகியதும், கவர்னர் ஜெனரல் பதவிக்கு ஓர் இலங்கையரே நியமிக்கப்படுவர் என்று தெரிகிறது. சேர் ஹென்றிமேஸன்மூருக்குப் பின், மிஸ்ரர் சேனநாயக்காவே இலங்கையின கவர்னர் ஜெனரல் ஆவார் என்று சொல்லப்படுகிறது.

# யாழ்ப்பாணம் நகரசபை

## வருமான விபரம்

சென்ற 1947ம் ஆண்டில் யாழ்ப்பாணம் நகரசபைக்கு வருமானமாக ரூபா 847,181, 76 சதம். கிடைத்திருக்கிறது, செலவு ரூபா 794,677, 42 சதம். மிதமிஞ்சிய வருமானம் ரூபா 97,912 06 சதம்.

1948-ம ஆண்டில் தெருக்கள் செப்பமிடுவதற்கு 30,000 ரூபா முதல் ஒதுக்கப்பட்டது. அத்தொகை போதாதென நகரசங்கத் தலைவர் கூறியதன்பேரில் மேலும் 10,000 ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### பாகிஸ்தான் மழுப்பல்

காஸ்மீரப் பிரச்சினையுடன் மாத்திரம் ஐக்கியதேச ஸ்தாபனம் தனது விசாரணையை நிறுத்தவொண்ணுது. கடந்த ஆகஸ்டுமாதம 15ம் திகதி தொடக்கமாக நாளிதுவரை இருநாடுகளுக்குமிடையேயுள்ள சகல பிணக்குகளையும் ஆராயவேண்டும். ஜுனகாத் சமஸ்தானப்பிரச்சினை போன்ற விஷயங்களையும் ஐக்கியதேச ஸ்தாபனம் விசாரணைபுரியவேண்டும் என்றெல்லாம், விஷயத்துக்கு ஒவ்வாத பிரச்சினைகளை பாகிஸ்தான கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசீயக்கொடிப் பிரச்சினை

## யாழ்ப்பாண மக்களின் கோரிக்கை

சிங்களமக்கள், தமக்கெனச் சிங்கக் கொடியை வைத்திருப்பதில் எவரும் ஆட்சேபனை புரியவில்லை. ஆனல் இந்த இலங்கை எல்லா மக்களுக்கும் பொதுவானது, ஆகவே, சகல மக்களுக்கும் பிரதிநிதித்துவமாயிருக்கத்தக்கதாக சிங்கக் கொடியில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்னும் கருத்துக்கொண்ட ஓர் தீர்மானம் நேற்றைத்தினம் (வியாழக்கிழமை) பிற்பகல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நிகழ்ந்த கூட்டமொன்றிற் சர்வாங்கீகாரமாக நிறைவேற்றப்பட்டது

தேசீயக்கொடி யமைப்பு விஷயத்தில் தமிழ்மக்களுக்கிடையே அபிப்பிராய பேதம் இல்லை என்பதை நேற்றைக் கூட்டம் தெள்ளத்தெளியக் காட்டிவிட்டது. ஐக்கியதேசியக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ், சமசமாஜக்கட்சி, சமதர்மக்கட்சி முதலாம் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஏகோபித்துக் கூட்டத்திற்குச் சமுகமளித்தமை குறிப்பிடத்தக்கது.

நியாயதுரந்தரர் திரு. ரீ. வீ இராசரத்தினம் கூட்டத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அத்வக்காத் எம் ஆப்துல்காதர் காரியதரிசியாகத் தெரிவுசெய்யப்பட்டார்

திருவாளர்கள் சாம் சபாபதி, வீ. நாகலிங்கம், ஹன்டி பேரின்பநாயகம், இ. சிவகுருநாதர், ஸ்ரீமதி இ. எம். தில்லையம்பலம் முதலியோர் அத் தீர்மானம் சம்பந்தமாகப் பேசினர்.

## தேகவியோகம்

### ஸ்ரீ க. அம்பலவாணர்

புங்குடுதீவிற் பிரபலமுற்று வாழ்ந்த திரு. கே அம்பலவாணர் அவர்கள் இம் மாதம் 7-ந் திகதி பிற்பகல் 5 மணியளவில கொழும்பிலுள்ள தமது கிருகத்தில் மனைவி மக்கள் சமுகத்தில் "இரத்தக் கொதிப்பு" நோய் காரணமாக தமது 55-ம் வயதில் தேகவியோகமாயினர் பிரேதம் கொழும்பிலிருந்து தய்நாடாகிய புங்குடுதீவுக்குக் கொணடுவரப்பட்டு 9-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை இவரது கிருகத்தில் சப்தர்வு வாசிகளும் சமுகமாயிருக்கப் புத்திரர்களிருவரும் தந்தைக்குரிய கிரியைகளைக் குரு முன்னிலையில் நிறைவேற்றுவாராயினர். இவரது குணவிசேஷங்களையும் புரிந்த தேசத் தொண்டுகளையும் இனிது விளக்கி தலைமையாசிரியர் திரு. என். சேதுபதி அவர்கள் விரிவுரை நிகழ்த்தினர் பின்னர் பிரேதம் பெருந்திரளானேர் புடைசூழ ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு ஈமக்கிரியைகள் இரு புத்திரர்களாலும் நிறைவேற்றப்பட்டன.

இவர் மலாய்நாட்டிலிருந்த காலத்து "மலாய புங்குடுதீவு ஐக்கிய சங்கத்தின" மூலமாயும், கொழும்பிலிருந்த காலத்து 'கொழும்பு புங்குடுதீவுஐக்கியசங்கத்தின்" மூலமாயும் தாய்நாட்டுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளாகிய பாலம்போடுதல், ஆங்கிலப் பாடசாலை நிறுவுதல், "ரெலிபோன" அமைத்தல் ஆதியனவற்றை முற்றுவிப்பாராயினர். தீவுப் பகுதிகளின் பாராளுமன்ற அபேட்சகராக வெளிப்பட்ட ஐவருள் ஒருவராக முற்பட்டு நின்றவருமாவர் இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

—கடித

உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

அப்படியானல் இந்துசாதனத்தில் விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமண அழைப்பு

## காசிப்பிள்ளை—பாலாம்பிகை

நிகழும் சர்வசித்து வருஷம் தை மாதம் ௫-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை (18 1—48) இரவு 11 மணியளவில் வரும் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில், வண்மேற்கு திரு காசிநாதர் கணபதிப்பிள்ளை புத்திரனும் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை ஆசிரியருமாகிய திருவளர் செல்வன் காசிப்பிள்ளை அவர்களுக்கும் வேலணை மேற்கு திரு. வைத்தியநாதர் கந்தையாபிள்ளை அவர்களின் புத்திரி திருவளர் செல்வி பாலாம்பிகை அம்மாளுக்கும் திருமணஞ் செய்து வைக்கப் பெரியார்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் சுற்ற மித்திரர் சகிதமாய் வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றேம்.

மணமகளில்லத்தில் முதல்மூன்றுநாளும்
மணமகன் இல்லத்தில் நான்காம் நாளாகிய (21-1-48) புதன்கிழமையும்
உபசரணைக் கொண்டாட்டம் நடைபெறும்

இங்ஙனம்

க. சண்முகநாதன்
மணமகனின் தமையன்

க. பொன்னம்பலம்
மணமகளின் தமையன்

[illegible]துரைஒழுங்கை — வண் - மேற்கு

M 121 13

# திருக்கேதீச்சரத்தைப்பற்றிய அறிக்கை

3-ம் பக்கத் தொடர்ச்சி

கோவிலின் பெரும்பாகம் தகரத்தால் வேயப்பட்டிருக்கின்றது; அத்தகரங்களும் பழுதுபட்டிருக்கின்றன. கோவிலுக்கு மதிலில்லை. மணிக்கோபுரமில்லை. யாத்திரிகள் தங்குவதற்கு மடமில்லை. பல திருத்தங்கள் ஆவசியகஞ் செய்யவேண்டியிருக்கின்றன. புதுக்கட்டடங்களும் அமைக்கவேண்டியன.

ஆங்குத் தண்ணீர்வளம் மிகக்குறைவு. கோவிலுக்கு முன்னுள்ள பாலாவியின் ஒருபாகமான குளத்திற்றுன் திருமஞ்சனத்திற்கும், சமையலுக்கும், யாத்திரை வாசிகள் ஸ்நானஞ் செய்வதற்கும் தண்ணீர் பெறக்கூடியதாயிருக்கின்றது. இக்குளம் வைகாசி ஆனி ஆடி ஆவணி மாதங்களில் வற்றிவிடுவதுண்டு. அக்காலங்களில் யாவரும் தண்ணீரின்றி கஷ்டப்படுவார்கள். மாளிகைத்திடல் என்னும் இடத்திலிருந்து வண்டி மூலம் தண்ணீர் அக்காலங்களில் வருவிக்கப்படுகிறது.

சைவமக்கள் செய்யவேண்டியன:

1 இப்புராதன சிவாலயத்தை நல்ல முறையில் நிருவகிப்பது இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள சைவர்களுடைய கடமையாகும். கொழும்பு விவேகானந்தசபை, கொழும்புச் சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை போன்ற சபைகளும், சைவப்பெரியார்களும் ஷை கோவிலை இப்பொழுது நிருவகித்து வரும் நகரத்தாருடன் கலந்து ஆலோசித்து, இதனைச் செவ்வனே நடத்துதற்கு ஒரு அதிகாரசபையை நிறுவினால் நன்மையுண்டாகும்.

2 யாத்திரீகர் தங்குவதற்கு ஒருமடம கட்டவேண்டும் இத்திருப்பணிக்கு புலோலி திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை யவர்கள் ரூபா 2000 உபகரித்திருப்பதாக அறிகின்றோம், கோவிலதிகாரிகள் ஒரு மடம் கட்ட அத்திவாரமிட்டிருக்கின்றார்கள்.

3 வருட முழுவதும கோவிற் பூசை முதலியவற்றுக்கும் யாத்திரீகர் தேவைக்கும பெரியகுளத்தில் இருந்து தண்ணீர் குழாய்மூலம் பெறக்கூடிய ஒழுங்குகளைச் செய்யும்படி அரசினரைக் கேட்கவேண்டும்.

4 கோவிற்கட்டடங்களைத்திருத்த வேண்டிய இடங்களில் திருத்தியமைக்க வேண்டும்.

5 இப்பொழுது சிறுகாவற்குளம் என அழைக்கப்படும் புகையிரதஸ்தானம் முன் திருக்கேதீச்சரஸ்தானம (Station) என அழைக்கப்பட்டது. சில வருடங்களுக்குமுன் யாதுகாரணம்பற்றியோ அரசினர் அதனை மாற்றிவிட்டார்கள். பழைய பெயரையே அப்புகையிரதஸ்தானத்துக்கு இடும்படி அரசாங்கத்தாரைக் கேட்கவேண்டும்.

6 தேவகோட்டை வெள்ளையூருணியில் இப்பொழுது வசித்துவரும திரு. பழ. சோம. கைலாசநாத செட்டியாருடைய தந்தையார் திருக்கேதீச்சரச் சிவாலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான மரம், கல் முதலியவற்றைத் தேடி, வேதாரணியத்தில் வைத்திருந்தார். அதற்குப் பணமும ரூபா 80,000 ஒதுக்கிவைத்திருந்தனர்.

இரண்டாவது உலகயுத்தம காரணமாகவும், அவர் சிவபதமடைந்தமை காரணமாகவும் திருக்கேதீச்சரத் திருப்பணி தடைபட்டுவிட்டது. திரு. கைலாசநாதன் செட்டியார் அவர்கள் தமது தந்தையாருடைய கருத்தைப் பூர்த்திசெய்ய விருப்பமுடையவராகவிருக்கின்றாரென அறிகின்றோம். அவருக்கு, கோவிற் திருப்பணியைப்பற்றி நினைப்பூட்டிக் கடிதமெழுதுதல் வேண்டும்.

7 குறித்த சிவாலயம் சைவாகம விதிப்படி நடைபெறுதற்கு அயற் கிராமங்களில் உள்ள மக்கள் சைவ சமய உண்மைகளையுணர்ந்து சைவாசார முறைப்படி ஒழுகுகின்றவர்களாக இருக்கவேண்டும. அவர்களை அவ்வாறு ஒழுகச் செய்தற்கு மன்னார்ப்பிரிவிலே தேவையான இடங்களிற் சைவப்பள்ளிக்கூடங்கள் கட்ட முயற்சிக்க வேண்டும். சைவப்பிரசங்கங்களை செய்ய ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

இப்புராதன சிவாலயத்தைச் செவ்வனே பரிபாலித்து வருதற்குரிய ஒழுங்குகளைச் செய்தல் சைவமக்கள் எல்லாருடைய கடனாகும். இலங்கையிலிருந்து, சிதம்பரம், திருவாரூர் முதலிய சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்கின்ற சைவமக்கள் இத்தலத்தையும் வழிபட்டுச் செல்லும வழக்கத்தைக் கொள்ளவேண்டும். திருக்கேதீச்சர மூர்த்தியையும், கௌரிநாயகி அம்பாளையும் முறைப்படி தமிழர்கள் ஆராதனைசெய்து வருவார்களாயின் ஈழநாட்டிற் சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கு மென்பதற் கையமில்லை.

(1) கா. சண்முகம் (2) மு. மயில்வாகனம். திருக்கேதீச்சர விசாரணைச்சபை அங்கத்தவர்கள்,

* இவ்வறிக்கை 11—1—48-ல் நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில் படித்து அங்கீகரிக்கப்பெற்றது.

மு. மயில்வாகனம்,
12—1—48. காரியதரிசி
யாழ்ப்பாணம். சைவபரிபாலனசபை.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதியி லுள்ள நவாலி வடக்கிலுள்ள கோட்டைக் குளத்திலுள்ள வலதுபக்க வாய்க்காலில் ஒன்றும் இடதுபக்க வாய்க்காலில் ஒன்றுமாக இரண்டு கொன்கிறீற் அணைகள் கட்டுவதற்கு வடமாகாண ஏஜண்டரவர்கள் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் றெண்டர் ஏற்றுக் கொள்வார்கள். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் இருபத்தைந்து (25) கச்சேரியிற் கட்டி வடமாகாண ஏஜண்டர் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச் சீட்டுக்கு ஒவ்வொரு பத்திரமாக றெண்டர் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந் தேதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். மறு விபரங்கள் வடமாகாண ஏஜண்டரிடம் பெறலாம். G. 144, 16.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூனகரி துணுக்காய்ப் பகுதி பல்லவாயன்கட்டி லுள்ள பல்லவராயன்கட்டுக் குளக்கட்டு பெலப்படுத்துவதற்கு வடமாகாண ஏஜண்டரவர்கள் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி வரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் றெண்டர் ஏற்றுக்கொள்வர்கள். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் இருபத்தைந்து (25) கச்சேரியிற் கட்டி வடமாகாண ஏஜண்டர் கையொப்ப மிட்ட ஒவ்வொரு பற்றுச் சீட்டுக்கும் ஒவ்வொரு பத்திரமாக றெண்டர் 1948-ம் ஆண்டுஜனவரி மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். மறு விபரங்கள் வடமாகாண ஏஜண்டரிடம் பெறலாம்.

G 146 16.1-48.

## காணிவிற்பனவு விளம்பரம்

திருத்தம்பளையாம்பளை என்னுங்காணி, 117 பரப்புக் கொண்டது, கீரிமலை-மாவிட்டபுரம் தெருவோரத்தி லுள்ளது; அரசினர் 'சீமெந்து'த் தொழிற்சாலைக்கு அணித்தாக வுள்ளது; வாங்குவோர் விருப்பத்திற் கிசைய முழுநிலமாகவேனும் பாகம் பாகமேனும் கொடுக்கலாகும்; வாங்கவிரும்புவோர் இந்த ஜனவரி மாசம் 25-ம் தேதிக் கிடையில் கொழும்பு, 7 றெஸ்மீட் பிளேஸ் ஸ்ரீநமசிவாயம் அவர்களுக்கு எழுதவும்.

R. தேவசேனுபதி,
349, டாம் ஸ்திறீற், ப்றொக்டர்.
கொழும்பு.

Mis. 223, 16—20.1.48.

# காணி விற்பனவு

சுதுமலையிலிருக்கும் பொன்னையா பிச்சை அமிர்தனுயகம் உவில்லியம்ஸ்என்பவரைப் பயித்தியகாரனுக அத்தாட்சிப்படுத்தப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 925-ம் இலக்கத்தில் எழுதிய கட்டளையின்படி பின்வருங் காணிகள் விலைக்கிருக்கிறது.

வாங்கவிரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அல்லது மேற்படி கோட்டுச் சக்கிடுத்தாருக்கு தங்கள் கேள்வித் தொகையைக் கைச்சாத்திட்ட பத்திரமூலம் அனுப்பவேண்டியது; அப்பத்திரங்கள் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 21 நாளுக்குள் கிடைக்கவேண்டியது.

கோட்டின்தீர்மானத்தின்படியே காணிகள் விற்கப்படும்காணி வாங்குபவர் கிரயம் முழுவதையும் தீர்மானித்த நாளிலிருந்து ஒரு வாரத்துக்குள் கோட்டில் கட்ட வேண்டியது.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில்கோவிற்பற்று உடுவிலிறை "மலையாளனெல்லை" நிலபர. 7. எல்லை: கிழக்கு, குட்டியர் சுப்பையா வடக்கு: ஒழுங்கை மேற்கு: காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை பெண் பாறுபதிப்பிள்ளையின் உரிமைக்காரர். தெற்கு: முருகேசர் இளையதம்பியும் பெண் வள்ளியம்மைப் பிள்ளையும், இது முழுவதும் தென்மேற்குப் பக்கத்தில் இருக்கும கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காலுரித்தும்;

2. ஷை இறை மலையாளனெல்லை நிலபர. 4½. எல்லை: கிழக்கு, வேலுப்பிள்ளை கனகலிங்கம், வடக்கு முருகேசர் இளையதம்பியும், பெண்வள்ளியம்மைப்பிள்ளையும் மேற்கு, பெரியதம்பி முருகேசுவும் பங்காளரும் விஞசித்தம்பி கோபாலபிள்ளையும். தெற்கு; விஞசித்தம்பி கோபாலபிள்ளை இது முழுவதும், வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

3. ஷை இறை "எல்லைமுல்லை" நிலபர 5 எல்லை: கிழக்கும் மேற்கும் காலஞ்சென்ற முருகேசர் முத்துத்தம்பியின் உரிமைக்காரிஞதனம், வடக்கு, கிணற்றுப் பாவிப்புக்கென விடப்பட்ட நாலுமுள அகலமுள்ள பாதையும் கிணறும், காலஞ்சென்ற முருகேசர் முத்துத்தம்பியின் உரிமைக்காரரும். தெற்கு ஒழுங்கை இது முழுவதும் இந்தக்காணியிலிருக்கும்கிணற்றில் ஆறிலொரு பங்கும், மற்றும் அயற்காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும்.

கோட்டுக் கட்டளைப்படி
R.R. Nalliah
தரணி

1st Cross Street, Jaffna,
M 224. 16—1—48.

## கிராமச்சங்கங்கள்

தேர்தலில் புதிய முறை

கிராமச்சங்க அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் இப்போதைய முறை தவிர்க்கப்பட்டுப் புதிய ஓர் முறையை வகுக்கச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதன்படிக்கு பாராளுமன்றத் தெரிவு, நகரசங்கத் தெரிவு என்பவற்றில் வாக்காளர்கள், சம்மதச்சீட்டில், அபேட்சகர்களுக்குரிய அடையாளங்களுக் கெதிரே "புள்ளடி" யோடுதலாகிய முறையே இனிக் கிராமச் சங்கத் தேர்தல் விஷயத்திலும் நடக்கும்.

கிராமச்சங்க அங்கத்தவராக முன்வரும் அபேட்சகர், பத்துருபாப் பிணைப்பணம் கட்டவேண்டும்.

இந்தப் புதிய முறையின்படி முதன் முதலாகத் தேர்தல் நிகழும் கிராமச்சங்கங்கள் கொழும்புப் பகுதியில் எட்டும் களுத்துறைப் பகுதியில் ஐந்துமாம்.


## கலாவல்லி புத்தகசாலை

( இந்துக்கல்லூரிக்கு அணித்தாக )

### வண்ணார்பண்ணை

இங்கே தமிழ் ஆங்கில வித்தியாசாலை கல்லூரிகளின் மாணவர்களுக்காகிய சகல ஆங்கில தமிழ்ப் புத்தகங்கள், கொப்பி, பேனு பென்சில்கள், வரைதற்காகிய உபகரணங்கள், தினவரவு டாப்புக்கள் முதலியவைகளும், இலக்கண இலக்கிய புராண இதிகாசங்களும், கற்பலகைகள், 'ஃபூல்ஸ்காப்' முதலிய கடதாசி வகைகள் இன்னும் ஆகவேண்டியவைகளெல்லாம் சகாயமான விலைக்குக் கொடுக்கப்படும்.

M 225 16 20

## நாவலர் பதிப்பு நூல்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பதிப்புப் புத்தகங்களை, வட இலங்கை முழுவதற்கும் வருவித்து விற்கும் உரிமை யாழ்பாணம் சைவபரிபாலனசபை மனேஜருக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கின்றது; புத்தகங்கள் விரைவில் வந்துசேரும், வந்து சேர்ந்தவுடன் இப் பத்திரிகை வாயிலாகத் தெரிவிக்கப்படும்.

வண்ணார்பண்ணை
16—1—48

மனேஜா
யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை

# கிருஷ்ணன் றாது

## சருக்கவுரை

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றாது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை, சரித்திரத்தொடர்பு, நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந. சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அணு 12)

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்
20—10—47.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி ஜனவரி 17

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 தஞ்சாவூர் எம் ஹம்ஸவல்லி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 எம் எஸ் நாராயண ஐயர் வயலின் 8 30 காலைஇசை இசைத்தட்டு 9 முடிவு.

1 எம் எஸ் நாராயணஐயர் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைக்குறிப்பு 2 15 தர்மபுரம்எம் சுப்பிரமணிய முதலியர் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 தர்மபுரம் எம் சுப்பிரமணிய முதலியார் பாட்டு 5 10 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தஞ்சாவூர் எம் ஹம்சவல்லி பாட்டு 7 15 தமிழ வளர்ச்சி 7 30 தமிழில் செய்திகள் 7 45 தன்னக்குடி வெங்கடராமையர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி எஸ மரியானந்தம் பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

ஞாயிறு ஜனவரி 18

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 என் சந்திரசேகரன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 ஆர் மீனும்பாள் ராஜன் வீணை 9 முடிவு.

12 சாளரத் தாமரை 12 45 கண்டெடுத்த குண்டுமணி நாடகம் 1 மணிமலர் 1 20 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி எஸ் பகவதி ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 என் எஸ் சந்திரசேகரன் பாட்டு 5 40 தேவாரதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஆர் மீனும்பாள் ராஜன் வீணை 7 30 தமிழில் செய்திகள் 7 45 புத்தக விமாசனம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஸோரா இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 கே பி தேவராஜுலு சாக்ஸபோன் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் ஜனவரி 19

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பெரிய கொத்தமங்கலம் ஆர் சிவசுப்பிரமணியம் நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் 8 30 பி என விஜய ராகவன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி என் விஜய ராகவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 பி என் விஜயராகவன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 பெரிய கொத்தமங்கலம் ஆர் சிவசுப்பிரமணியம் நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ருக்மிணி கிருஷ்ணன் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 என் சொந்த அபிப்பிராயம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 டி எஸ் வைத்தியநாதன் வயலின் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

செவ்வாய் ஜனவரி 20

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி ஆர் துரைவேலு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8 30 பி ஆர் கோபால கிருஷ்ணன் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி ஆர் துரைவேல் பாட்டு 2 தமிழில்செய்திகள் 2 05 டி ஆர் துரைவேலு பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 30 முடிவு

மாலை 5 பி ஆர் கோபால கிருஷ்ணன் புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம்

## 850 படி அரிசி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தங்கவேலாயுதம் என்பவர் 850 படி அரிசியைச் சோரமாகக் கடத்திச் செல்ல முயற்சிக்கையில் இணுவிலுக்குச் சமீபமாகப் பொலிசாரால் அகப்படுத்தப்பட்டார். அவர் இதன்பொருட்டு யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டு 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார். 850 படி அரிசியும் பறிமுதலாக்கப்பட்டது.

## 250 ரூபா அபராதம்

சிறுப்பிட்டியைச் சேர்ந்த கதிர்காமர் சபாபதி என்பவர், சமீபகாலத்தில் நிகழ்ந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆள்மாறாட்டம் செய்தார் என்ற குற்றத்தின் பேரில் யாழ்ப்பாணம் நீதிபதியால் 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டார்.

## விளம்பரம்

வடமாகாணம் கிளிநொச்சியி லுள்ள கோலனியிலும் அரசாங்க கமத்திலும் $9'' \times 4\frac{1}{4}'' \times 2\frac{1}{2}''$ பிரமாணமுள்ள சுட்ட செங்கற்கள் *1,000,000* ஒப்பந்த மெடுத்தவுடன் துவங்கி ஒப்படைக்க கொழும்பு கமத்தொழில் மந்திரசபையின் றெண்டர் சபைத்தலைவர் *1948*ம் ஆண்டு ஜனவரி மாதம் *27* ந் திகதி செவ்வாய்க் கிழமை பகல் 12 மணி வரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார். ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரத்துக்கும் ரூபாய் *100* திறைசேரியில் அல்லது ஒரு கச்சேரியிற் கட்டி வடமாகாண ஏசண்டர் கையொப்பமிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். மறு விபரங்கள் வடமாகாண ஏசண்டரிடம் பெறலாம்.

G *142 13 16*


## கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம போன்ற தேக பலத்தைத் தருவதி இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் ரூத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம் :

**ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்**

— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (



## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்


இசைத்தட்டு 7 15 தாளவாத்யக் கச்சேரி 730 தமிழில் செய்திகள் 7 45 சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பாட்டு 9 ஆங்கலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 930 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 அப்துல்கனி 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

## உலகம்பலவிதக் கதை

2 ம்பக்கத் தொடர்ச்சி

சிந்தித்தார்கள்: உபாயஞ் சூழ்ந்து தேறுத லடைந்தார்கள்; அந்த மூவரும் தங்கள் அரசகுமாரியைத்தேறச் செய்து "எங்கள் ஆருயிர் நிகர்த்த குமாரியே கலங்குவ தொழிக, கனவிற் கணவனைக் கூட்டிவைத்த கடவுளே, அவனை நனவிலும் உனக்கு நாயகனுகக் கூட்டிவைத் தருளுவார்; நாங்கள் இப்பொழுது, சுவர்க்க மத்திய பாதல மென்று சொல்லப்படும் மூன்று உலகங்களிலுள்ள அரசர்களின் வடிவங்களைச் சித்திரமாகத் தீட்டி உனக்குக் காட்டுவோம்: அவற்றுள் உன் காதலன் வடிவைக் கண்டுதெளிகுதி" என்று ஆதரவுடன் பகர, இரத்நவல்லியும் தன் கவலை ஒருவாறு நீங்கப் பெற்றுள். சந்திரலேகை யெனனுந் தோழி இந்திரன முதலாகச் சொல்லப்பட்ட தேவர்களுடைய வடிவங்களைத் தீட்டிக் காட்டினுள்; அனங்கலேகை யென்னும் பாங்கி பூவுலகிலுள்ள வேந்தர்கள் வடிவினை வரைந்து காட்டினுள்: சித்திரலேகை யென்னுஞ் சேடியானவள் பாதலத்துள்ள அரசர்களின் உருவங்களைச் சித்திரித்துக் காட்டினுள்; மூந்திய தோழிய ரிருவரும எழுதுக் காட்டிய சித்திரங்களிலல தன காதலன் வடிவினைக் காணுது கலங்கிய இரத்நினுவல்லி சித்திரலேகை வரைந்த பாதல மன்னர் படங்களை ஒவ்வொன்றுகப் பார்த்த போது கடைசியில், தனனைக் கனவில் வஞ்சித்து மறைந்த காதலனுகிய இரத்தின சூடனுடைய வனப்பு வாய்ந்த வடிவத்தைக் கண்டாள்; தன் கண்களாரப் பார்த்தாள்; தன் இரு கரங்களிலும் ஏந்தி அணைத்தலின்றி இரத்தினுவல்லி தன்னைமய மறந்து பார்த்துக்கொண் டிருந்த இரத்தின சூடனுடைய படததை, இவனே அவள் விரும்பிய உத்தம புருஷ னென்றறிந்த தோழியருள் ஒருத்தி, இரத்தினுவல்லியின் கரத்திலிருந்த படததை அகற்றுதலும்; அவள் நாணிச்சோக முற்றுள்: பாங்கியர் மூவரும் பழையபடி அவள் கரத்திற் சித்திரத்தைக கொடுத்து "அரசிளங் குமாரியே, உன்காதலனை இன்னுனென அறிந்து கொண்டோம்; கவலை கொள்ளற்க; உன் குல தெய்வமே அவனை விரைவில் உன்னுடன் கூட்டிவைக்கும், மனந் தளரல்" என்று தேற்றினுர்கள்;

**இரத்தி னஸ்வரப் பெருமானே!**

**உனக்கடைக்கலம்!!**

இவ்வாறு அவர்கள் அவளைத் தேற்றிக்கொண்டு காசியை விட்டகன்று தம் நாட்டை நோக்கிச் செல்லும் மார்க்கத்திலே, சுவா என்னும் ஒரு கொடிய அசுரன் அவர்களைக் கண்டு காமவெறி கொண்டு சமீபத்தில் வந்து காமாவேசங் கொண்டானுய் அந்தக் கன்னியர் நால்வரையும் அள்ளிக் கொண்டு விரைந்து போவானுயினுன்: அந்த நேரத்தில் இரத்தினுவல்லி செய்வதின்ன தென அறியாளாய்ச் சஞ்சலமுற்று "இரத்தினேசுவரப் பெருமானே! உனக்கு அடைக்கலம்!! அடைக்கலம்!!!" என்று ஓலமிட்டாள்; அவள் தன் தோழியருடன் சேர்ந்திட்ட ஓலமானது, தன் செவியிற் பட்ட மாத்திரத்தே நாகலோகத் தரசகுமாரன் காற்றென விரைந்து அங்கேவந்து அக்கன்னியர்களை அவன்கொண்டு அப்பாற் செல்ல வொட்டாது தடுத்து "ஏ பேதாய், வீணே என்வாளுக்கு இரையாகாதே, உந்தப் பெண்களை உடனே விடுதலை செய்து உன்னுயிரை மாத்திரங் கொண்டு தப்பிப் போ" என்று கடிந்து கூறினுன்; அதற்கு அசுரன் பதிலுந்தாஞ் சொல்லானுய்க் கன்னியர்களைத் தப்பவிடானுய்த் தன் கரத்திலிருந்த கதாயுத மொன்றைச்

# இன்றையத் தீர்மானம்

## சிங்கக்கொடியே அங்கீகரிக்கப்படுமாம்

இன்று பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபையில் தேசியக்கொடி விஷயமான பிரேரணை மட்டக்களப்புப் பிரதிநிதியால் எடுத்தாளப்படும். சிங்கக்கொடியே தேசியக்கொடியாக்கவேண்டு மென்பதே ஜனுப் சின்னலெப்பையின் 'தீர்மானம்.

இவ்விஷயத்தில் ஐக்கியதேசியக்கட்சியினர் ஒருமித்த மனப்பான்மையுடன் இருக்கின்றனர். அதாவது எந்தவிதமான மாற்றமுமில்லாமல், வாளேந்திய சிங்கக் கொடியையே தீர்மானிக்கவேண்டுமென்பதில் அவர்கள் பிடிவாதமாயிருக்கின்றனர். அவர்களை ஆதரிக்கும் ஓர்சில சிறுபான்மை யங்கத்தவர்களும் இத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களாம். மந்திரசபையிலுள்ள ஸ்ரீமான்கள் சிற்றம்பலம், சுந்தரலிங்கம், ஜனுப் ஜயர் என்பவர்களும், காரியதரிசிகளான ஸ்ரீமான்கள் நல்லையா முதலியவர்களும், ஐக்கிய தேசீபக்கட்சியையே இது விஷயத்திலும் ஆதரிப்பார்களாம்.

எதிர்க்கட்சியில், இக்கொடி விஷயமாக அபிப்பிராயபேதம் இருக்கிறது. டக்ரர் என். எம். பெரீராவும் அவரது சமசமாஜிகளும் சிங்கக்கொடித் தீர்மானத்தை எதிர்க்கமாட்டார்களாம். ஆகமிஞ்சினுல், எதிர்க்கட்சியில் 30 பேர் மாத்திரமே இதனை எதிர்ப்பர் என்றும், கடைசியில் வாளேந்திய சிங்கக்கொடியே சிங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தினுல் தேசீயக்கொடியாக்கப்படு மென்றும் சொல்லப்படுகிறது.

சுழற்றி அந்த நாகருலகவீரன் மார்புக்கு இலக்காக எறிந்தான். தனக்கெதிரே வேகமாக வருந் தண்டாயுதத்தை அந்த அரசகுமாரன் தன் கரத்திலுள்ள வாளினுல் தடுத்து வெட்டிச் சிதைத்தான்; தான் எறிந்த தண்டாயுதத்தைப் பகைவன் சிதைத்தமையைக் கண்ட அரசன் நாகம்போலச்சீறித் தன் அதரங்களை வக்கிர தந்தங்களினுல் அதுக்கிக்கொண்டு, தன் கரத்திற் கொண்ட வில்லை உறவளைத்து நாணொலி செய்து பல பாணங்களை ஏககாலத்திலே தொடுத்துச் செலுத்தினுன்; அது கண்ட நாகருலக அரசகுமாரன் தன்கரத்திலுள்ள வில்லிற் பல வெவ்விய அம்புகளை அநுசந்தித்துச் செலுத்தி அரக்கன் ஏவிய பாணங்களனைத்தையுந் துண்டங்கண்டு சுவா எனப்படும் அரசனுடைய உயிரையுங் கவர்ந்தான். மாண்ட அரசனுடைய கையிலிருந்து விடுதலைபெற்ற கன்னியர் நால்வரும், தங்கள் மானத்தையும் ஆருயிரையுங் காத்த வீரனுடைய கால்களில் பஞ்சாங்கமாக விழுந்து வணங்குதலும், அவன் அவர்களை எழச்செய்து, உங்கள் நாமதேயமென்ன? இக்கொடியவன் கையில் அகப்பட்டதெவ்வாறு" என்று வினவ, இரத்தினுவல்லியையொழிந்த தோழியர் மூவரும் வரலாறு முழுவதையும் எடுத்துச்சொன்னுர்கள கேட்ட இராசகுமாரன், "கொடிய அசுரன் உங்களைப் பற்றிய போது இரத்தினேசுவரன் பெயரைச் சொல்லி நீவிர் ஓலமிட்ட ஏது என்ன" என்று வினவலும், தங்கள் தலைவி காசியிலுள்ள இரத்தினேசுவர இலிங்கத்தைக் குலதெய்வமாகக் கொண்டு பூசித்துவரும வரலாற்றைத் தோழியர் அவ்வீரனுக்குச் சொன்னுர்கள்; இதற்கிடையில் அந்த வீரனுடைய நாமத்தை யறியும்படி இரத்தினுவல்லி தன் சேடியர்க்குக் குறிப்பால் தெரிவிக்க, அவர்கள் விநயத்தோடு அவன் நாமத்தை வினவ, அவன்என்னை "இரத்தினசூடன் என அழைப்பார்கள்" என்றான்.

வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதன்ஸ் பிரசாரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

**எஸ். ஆர். எஸ். நாதன்**

21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6-47—6-6-48



# திருவருட்பயன்

**சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)**

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில
எஸ். எஸ். ஸீ. வகுப்புகளுக்குச் சமய பாடமாக
விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அனு 12 )

## சைவபோதம் (முதற் புத்தகம்)

மேற்படி ஆசிரியர் எழுதியது

13-ம் பதிப்பு; விலைசதம் 50 ( அனு 8 )

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும்,
பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்



திரு. வே. சிவக்கொழுந்து
அவர்களியற்றிய

# பிரதமவகுப்பு நூல்கள்

1 நாலாந்தரப் பூமிசாத்திரம் ( 7-ம் பதிப்பு ) விலை சதம் 80
2 ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் ( 5-ம் பதிப்பு ) விலை ரூபா 1
3 நாலாந்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 35
4 ஐந்தாத்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 50
5 இரண்டாம மூன்றாந்தரக் கணிதங்கள் ( அச்சில் )
விரைவில் வெளிவரும்

☞ புதியபாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கில பாடசாலைகளில்கல்விபயிலும் தமிழ்ச்சிறுர்களுக்கும் உகந்தபாடப்புத்தகங்களாகும்

**வட இலங்கா புத்தகசாலை**

பெரியதெரு, பருத்தித்துறை



# இலக்கிய வாசகம்

மூன்றும் புத்தகம்

**நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது**

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

**இதன் வசனபாகம்**

சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

**செய்யுட் பாகம்**

பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக் கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**பிரதி ஒன்று விலை சதம் 60 (அனு 10)**

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**

யாழ்ப்பாணம்



# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி
சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலஙகை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்வின் ட்ரஸற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி,

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி.
திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை
(பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்,
வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள்
இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜேண்டு,

( Std 29 1-8—30-7-48)



# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங் கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல் லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



# தந்தரோக சஞ்சீவி

**கந்தசாமி வைத்தியர்**

**சந்தனுதித் தயிலம்**

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்த ரவாதமுடையது. ஒரு தடவை வேண டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட் டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வி. பீ. பி. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

**ஆயுள்வேத சிவசோதி**
**மெடிக்கல் ஹோல்**

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 ( வெ )


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, January 16 1948


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org